# கிழக்கு மாகாண கொடி பற்றிய அறிமுகம்

1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்புச் சட்டத்தின் 13ஆவது திருத்தச் சட்டத்திற்கமைய மாகாண சபைகள் அமைக்கப்படுகையில் அப்போதைய மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களின் விசேட கட்டளைகளின் கீழ் ஒன்றிணைக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இருபது வருட காலத்தின் பின் அதாவது 2006 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16ஆம் திகதி இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் உயர் நீதிமன்றக் கட்டளைக்கமைய மீண்டும் வடக்கு மற்றும் கிழக்கு என இரு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கிழக்கு மாகாணத்தின் ஒருமைப்பாட்டையும் சுயாதீனத்தையும் அறிமுகத்தினையும் உறுதி செய்யும் வகையில் கிழக்கு மாகாணத்திற்கு என உரித்தான மாகாண கொடியொன்று உருவாக்கப்படுவதன் தேவைப்பாட்டினை நிறைவு செய்யும் நோக்கில் கிழக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் ஆலோசனைக்கும் அறிவுறுத்தலுக்கமைய கொடியொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இக்கொடியில் பிரதான குறியீடுகளாக இடப்பட்டுள்ள கழுகு, மீன், சிங்கம் ஆகியவற்றின் படங்கள் முறையே திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களுக்கென நீண்டகாலமாக பயன்படுத்திய அம்மாவட்டங்களை பிரதிநிதிப்படுத்தும் குறியீடுகளாக அமையப் பெற்றுள்ளன.

இக்கொடியின் நான்கு மூலைகளிலும் உள்ள சூரியன் கிழக்கு மாகாணம் பூராகவும் பரந்துள்ள நிலப்பரப்பிற்கு ஒளிவீசும் சக்தியை வெளிப்படுத்தும் குறியீடாக அமைகின்றது. கொடியில் உள்ள நிறங்களில் மண்நிறமும் மஞ்சள் வர்ண நிரல்களும் பாரம்பரிய கொடி உருவாக்கத்தில் பயன்படுத்தும் நிறங்களாகவே குறிப்பிடப்பட்டுள்ளது.

இளம் நீல நிறத்தித்திள்ள எல்லை நிரல் கிழக்கு மாகாணத்தின் பிரதான கங்கைகள், ஆறுகள், குளங்கள் உள்ளடக்கியதாக நன்னீர் தேக்கங்களை குறியிடுவதாக பயன்படுத்தப்பட்டுள்ளன. இதனைச் சுற்றியுள்ள கடும் நீல நிறத்திலான நிரல்கள் இரண்டும் கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களின் எல்லைகளாக அமைந்துள்ள கடலை குறியிடுவதற்கான வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

இம் மாகாண கொடியானது 2007 மே மாதம் 22ந் திகதி கிழக்கு மாகாண கௌரவ ஆளுநர் ரியர் அட்மிரல் மொகான் விஜேவிக்ரம அவர்களினால் பதவி வழியில் வெளியிடப்படுகின்றது.